# பத்திரிகை செய்தி

## பதிவுத்துறை சீராய்வு கூட்டம்

## வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் அவர்களின் (பதிவுத்துறை வருவாய் மற்றும் சமாதான திட்ட பணி முன்னேற்றம்) குறித்த சீராய்வு கூட்டம்

**சென்னை 13.12.2011**

தமிழ்நாடு அரசு பதிவுத்துறையின் வருவாய் மற்றும் சமாதான திட்ட பணி முன்னேற்றம் குறித்த சீராய்வு கூட்டம் மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு.அக்ரி கிருஷ்ணமூர்த்தி அவர்களின் தலைமையில் தமிழ்நாடு அரசு தலைமைச் செயலகம், புனித ஜார்ஜ் கோட்டையில் இன்று (13.12.2011) முற்பகல் நடைபெற்றது. இதில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிவுத்துறையின் முத்திரைத்தீர்வை, பதிவுக்கட்டணம் மற்றும் இதர இனங்கள் குறித்த வருவாய் முன்னேற்றம் குறித்தும், இத்துறைக்கு புதிய கட்டிடங்கள் கட்டுதல், சார்பதிவாளர் மற்றும் பதிவுத்துறை அலுவலகங்களில் பொதுமக்களுக்கான வசதிகளை மேம்படுத்துதல், பதிவுத்துறையின் பொதுமக்களுக்கு தடையற்ற, விரைவான சேவை வழங்குதல் ஆகிய இனங்கள் குறித்து விரிவாக ஆய்வு செய்தார். சென்ற 2010-11-ம் நிதியாண்டில் நவம்பர் மாத இறுதியில் தமிழ்நாடு பதிவுத்துறையின் வருவாய் வசூல் ரூ.3218.90 கோடி ஆகும். ஆனால் 2011-12-ம் நிதியாண்டில் இதே கால அளவில் பதிவுத்துறையில் ரூ.3964.80 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. இது கடந்த நிதியாண்டுடன் ஒப்பிடுகையில் 23.17 சதவிகிதம் ஆகும். அதாவது ரூ.745.90 கோடி அதிகமாகும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிவுத்துறை அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள் வருவாய் இலக்கு ரூ.6492 கோடி அடைய வேண்டும் என அறிவுரை வழங்கினார்கள்.

முத்திரைச்சட்டம் பிரிவு 47A என்ற பிரிவின்கீழ் கடந்த ஆட்சியின் போது 34879 ஆவணங்கள் பொதுமக்களுக்கு திருப்பி வழங்கப்படாமல் முடங்கி கிடந்தன. இதில் அரசுக்கு வரவேண்டிய வருவாய் ரூ.541.31 கோடி வருவாயை வசூலிக்க இயலாமல் இருந்தது. இந்த வருவாயை ஈட்டும் நோக்கத்துடனும், பொதுமக்கள் தங்களது விலைமதிப்பற்ற ஆவணங்களை திரும்பி பெற்றுச்செல்ல வேண்டுமென்று நோக்கத்துடனும் புதிய அரசு பெர்றுப்பேற்றவுடன் பொதுமக்களுக்கு அவர்கள் செலுத்த வேண்டிய முத்திரைத்தீர்வை மற்றும் பதிவுக்கட்டணத்தில் தள்ளுபடி செய்து சமாதான திட்டம் என்ற பெயரில் ஒரு சலுகை திட்டம் 01.11.2011அன்று அரசால் வெளியிடப்பட்டது. இந்த திட்டத்தினால் பொதுமக்கள் அடைந்த பயன்கள் மற்றும் பதிவுத்துறைக்கு ஈட்டப்பட்ட வருவாய் ஆகிய விவரங்கள் குறித்து மாண்புமிகு அமைச்சர் விரிவாக ஆய்வு செய்தார். அவ்வமயம் சமாதான திட்டத்தின்கீழ் 09.12.2011 அன்றைய கணக்கின்படி 4441 ஆவணங்கள் முடிவுசெய்யப்பட்டு பொதுமக்களுக்கு ஆவணங்கள் திரும்ப வழங்கப்பட்டன என்றும், இதனால் அரசுக்கு ரூ.20.66 கோடி வருவாய் ஈட்டப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது. சமாதான திட்டத்தின்கீழ் நிலுவையில் உள்ள அனைத்து ஆவணங்கள் மீதும் பயனுள்ள நடவடிக்கை மேற்கொண்டு இவ்வாவணங்களில் முடங்கியுள்ள அரசுக்கு சேரவேண்டிய வருவாயை முழுமையாக வசூலித்திட தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் மாண்புமிகு அமைச்சர் பதிவுத்துறை அதிகாரிகளை கேட்டுக் கொண்டார்.

இக்கூட்டத்தில் அரசு செயலாளர் திரு.சுனீல் பாலீவால், இ.ஆ.ப., பதிவுத்துறைத்தலைவர் திரு.தர்மேந்திர பிரதாப் யாதவ், இ.ஆ.ப., மற்றும் பதிவுத்துறை உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

2/2

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9